# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் 72/மா/2022**
**நாள்.26.07.2022**

திரு. R. இராமசாமி,
தூத்துக்குடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி. – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி, குரூஸ்புரம், மட்டக்கடை, சேதுராஜதெரு, எண் 116 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. இராமசாமி என்பவர், தூத்துக்குடி மாநகராட்சி 24வது வார்டு மக்கள் சார்பாக சமர்ப்பித்த 05.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.05.2022–ல் பெறப்பட்டு 72/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி, குரூஸ்புரம், மட்டக்கடை, சேதுராஜதெரு, எண் 116 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. இராமசாமி என்பவர், தூத்துக்குடி மாநகராட்சி 24வது வார்டு மக்கள் சார்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 05.05.2022 நாளிட்ட தனது மனுவில் :

" மாநகராட்சி 24வது வார்டு சர்வே எண் 24/2ம் எண்ணில் உள்ள குரூஸ்புரம் ரோடு 30 அடி அகலத்தில் கிழக்கே உள்ள குரூஸ்புரம் ரோட்டிலிருந்து மேற்கே உள்ள டேவிஸ்புரம் ரோட்டுடன் இணைகிறது. இந்த ரோட்டை புதுப்பிக்க மாநகராட்சியின் நடவடிக்கையில்

உள்ளது. இந்த நிலையில் மக்களின் வேண்டுகோளை பரிசீலிக்கும்படி பணிவுடன் வேண்டுகிறோம். இந்த ரோட்டில் கீழ்கண்டபடி மூன்று ஆக்கிரமிப்புகள் உள்ளன.

1. மழலையர் பள்ளி சமையலறை 6' x 9' அளவு 54 சதுரடி அளவு ஏ.சி.ஷீட்.
2. ஞானமுனீஸ்வரன் கோவில் 8' x 8 ' கட்டிடம் 8' x 8' தகர ஷீட்.
3. நிரந்தர கட்டிடம் 20' x 60' (1200 சதுரடி)

மூன்று ஆக்கிரமிப்புகளால் 30 அடி ரோட்டின் அகலம் 10 அடியாக குறைந்துள்ளது. எனவே இந்த ரோட்டில் குப்பை லாரியோ, குடிதண்ணீர் லாரியோ, கட்டிடப்பொருட்கள் கொண்டு வரும் லாரிகளோ நுழைய முடியாத நிலையில் உள்ளது. பொதுமக்களுக்கு இடையூராக உள்ளது. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவுறுத்தலின்படி பொதுமக்களாகிய நாங்கள் வேண்டுவது யாதெனில் இந்த ரோட்டில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கு ஒருதலைபட்சமாக இல்லாமல் அனைத்து ஆக்கிரமிப்பாளர்களுக்கும் ஒரே நேரத்தில் அறிவிப்பு (நோட்டீஸ்) கொடுத்து ஒரே நேரத்தில் அகற்றி பொதுமக்கள் 30 அடி ரோடாக பயன்படுத்த உத்தரவிடும்படி வேண்டுகிறோம்" என தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 22.06.2022 நாளிட்ட அறிக்கையில், தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 24வது வார்டு குரூஸ்புரம் ரோட்டிலிருந்து டேவிஸ்புரம் ரோட்டில் இணையும் சேதுராஜா தெருவில் உள்ள மழலையர் பள்ளி மற்றும் ஞானமுனீஸ்வரன் கோவில் ஆகிய ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்துவதற்கு ஆக்கிரமிப்பாளர்களுக்கு 11.05.2022–ம் தேதியில் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு ஆக்கிரமிப்பாளர்களால் கோவில் மற்றும் மழலையர் பள்ளி 28.05.2022ம் தேதியில் இடித்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சேதுராஜா தெருவில் நகர அளவரால் அளவீடு செய்யப்பட்டதில் நகர அளவை ஆவணங்களின்படி தற்போது ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்கிற விவரம் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 12.07.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.07.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. மனுதாரர் 12.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" தூத்துக்குடி மாநகராட்சி, 24வது வார்டு, சர்வே எண் 24/2ம் எண்ணில் உள்ள குரூஸ்புரம் ரோடு 30 அடி அகலத்தில் கிழக்கே உள்ள குரூஸ்புரம் ரோட்டில் இருந்து மேற்கே டேவிஸ்புரம் ரோடு வரை உள்ள ரோட்டில் ஆக்கிரமிப்புகள் 1– மழலையர் பள்ளி சமையலறை, 2–ஞானமுனீஸ்வரன் கோவில் நிரந்தர கட்டிடம் மற்றும் 3– கட்டிடங்கள் 1200 சதுர அடியிலும் உள்ளது. கட்டிடம் உள்ள இடத்தில் 30 அடி ரோட்டின் அகலம் 10 அடியாக குறைந்துள்ளது. எனவே, இந்த ரோட்டில் குடிதண்ணீர் லாரியோ அல்லது பொருட்கள் கொண்டு வரும் லாரிகளோ நுழைய முடியாத நிலையில் உள்ளதால், பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது.

இது தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சியில் பலமுறை புகார் செய்தும் நடவடிக்கை எடுக்காததால், மழைலையர் பள்ளி ஆக்கிரமிப்பு மற்றும் கோவில் ஆக்கிரமிப்பு ஆகிய இரண்டையும் பொதுமக்களாகிய நாங்களே எடுத்துவிட்டோம். மேற்கண்ட 30 அடி சாலைக்கான வரைபடத்தை மாநகராட்சியில் அளித்தும் மாநகராட்சி அலுவலர்கள் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்பு இடமான 1200 சதுர அடி நிலத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்க தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வில் தொடர்புடைய வரைபட நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. தூத்துக்குடி மாநகராட்சி உதவிப்பொறியாளர் 12.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" தூத்துக்குடி மாநகராட்சி, 24வது வார்டு, சர்வே எண் 24/2 குரூஸ்புரம் ரோட்டில் அமைந்துள்ள மனுதாரர் குறிப்பிட்டுள்ள மழலையர் பள்ளி ஆக்கிரமிப்பு மற்றும் கோவில் ஆக்கிரமிப்பு ஆகிய இரண்டு ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டுவிட்டன. மனுதாரர் குறிப்பிட்டுள்ள 1200 சதுர அடி வீட்டுமனையை சர்வேயர் கொண்டு அளந்து அங்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதனை உடனே அகற்றிட தேவையான நடவடிக்கையை உடன் எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி உதவி பொறியாளரின் வாக்குமூலம், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தூத்துக்குடி மாநகராட்சி, 24வது வார்டு, சர்வே எண் 24/2ம் எண்ணில் உள்ள குரூஸ்புரம் ரோடு 30 அடி அகலத்தில் கிழக்கே உள்ள குரூஸ்புரம் ரோட்டில் இருந்து மேற்கே டேவிஸ்புரம் ரோடு வரை உள்ள ரோட்டில் கீழ்க்கண்ட ஆக்கிரமிப்புகள் 1– மழலையர் பள்ளி சமையலறை, 2– ஞானமுனீஸ்வரன் கோவில் நிரந்தர கட்டிடம் மற்றும் 3– கட்டிடங்கள் 1200 சதுர அடியிலும் உள்ளது. கட்டிடம் உள்ள இடத்தில் 30 அடி ரோட்டின் அகலம் 10 அடியாக குறைந்துள்ளது. எனவே, இந்த ரோட்டில் குடிதண்ணீர் லாரியோ அல்லது பொருட்கள் கொண்டு வரும் லாரிகளோ நுழைய முடியாத நிலையில் உள்ளதால், பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட கோரியுள்ளார்.

மனுதாரர் ஆக்கிரமிப்பு தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சியில் பலமுறை புகார் செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மழலையர் பள்ளி ஆக்கிரமிப்பு, கோவில் ஆக்கிரமிப்பு ஆகிய இரண்டையும் பொதுமக்களே அகற்றி உள்ளனர். இதனை மனுதாரர் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது. மேலும் தூத்துக்குடி மாநகராட்சி அறிக்கையிலிருந்தும் இது ஊர்ஜிதமாகிறது.

6. மனுதாரரின் மனு மற்றும் அவரது வாக்குமூலத்திலிருந்து 3–வது ஆக்கிரமிப்பான அதாவது 1200 சதுர அடி வீட்டுமனை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட வேண்டும்

என்பதை அறியமுடிகிறது. மாநகராட்சி ஆணையர் தமது அறிக்கையில் மேற்படி சேதுராஜா தெருவில் நகர அளவரால் அளவீடு செய்யப்பட்டதில் நகர அளவை ஆவணங்களின்படி தற்போது ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என தெரிவித்துள்ளார். எனினும் தூத்துக்குடி மாநகராட்சி உதவி பொறியாளர் தனது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள 1200 சதுர அடி மனையை சர்வேயர் கொண்டு அளவீடு செய்து அங்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதனை உடனே அகற்றிட தேவையான நடவடிக்கை உடன் எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். உதவி பொறியாளர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தை நேரடியாக ஆய்வு செய்து மாநகராட்சிக்கு சொந்தமான இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதனை உடனே அகற்றிட உரிய விதிகளுக்குட்பட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்திட தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 3 ஆக்கிரமிப்புகளை தவிர, வேறு ஏதேனும் ஆக்கிரமிப்புகள் இருப்பின், உரிய அறிவிப்பு வழங்கி, அத்தகைய அனைத்து ஆக்கிரமிப்புகளையும் உரிய விதிகளுக்குட்பட்டு அகற்றிட தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

7. மனுதாரர் 1996ம் ஆண்டு அப்போதைய தூத்துக்குடி நகராட்சியால் 17.09.1996ம் தேதியில் அனுமதி வழங்கப்பட்டதின்பேரில்தான் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது எனக்கூறி அதன் நகலையும் அளித்துள்ளார். இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் அப்பகுதி மாநகராட்சி அலுவலர்கள் இருந்தது கண்டனத்துக்குரியது. நில அளவையரும் பொய்யாக கோப்பில் ஆக்கிரமிப்புகள் இல்லை எனக்கூறுவது கண்டிக்கத்தக்கது. இதற்கு துணைபோன கள அலுவலர்கள் மற்றும் நில அளவையர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். தூத்துக்குடி போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் இத்தகைய சாலை ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி நிர்வாகம் கண்டு கொள்ளாமல் மெத்தனமாக இருப்பது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. நகராட்சி நிர்வாக இயக்குநர் இது குறித்து தகுந்த அறிவுரைகளை மாநகராட்சி ஆணையருக்கு வழங்கவும், மாநகராட்சியால் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில் சுணக்கம் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் அறிவுறுத்தப்படுகிறார். இது குறித்த அறிக்கையை மாநகராட்சி ஆணையர் இந்நடுவத்திற்கு அனுப்பிட ஆணையிடப்படுகிறது. மேற்கண்ட ஆக்கிரமிப்பு இன்னும் 4 வாரகாலத்தில் அப்புறப்படுத்தவும் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

The indifference, collusion and inaction shown by the Corporation officials in the matter are severely censured and condemned. Being a local body administration such lethargy and dereliction of duties on the part of the Zonal officials can not be brooked. This mindset will only mislead the encroachers on the public property like corporation streets and roads that they can go scot-free and escape any legal action by the Corporation authorities. The Corporation Commissioner is instructed that the image of the Thoothukudi Corporation should not be dented in any manner by such willful, wanton and vicious attitude and work culture of the officials concerned. The DMA is requested to send a circular to all Commissioners to be vigilant, proactive and effective in the area of encroachments

on the properties that are vested with the Corporations. Strict disciplinary action should be launched against the Corporation delinquent officials of this Zone.

2022-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.R. இராமசாமி,
   எண்.116, சேதுராஜ தெரு,
   குரூஸ்புரம்,
   மட்டக்கடை,
   தூத்துக்குடி – 628 001.
2. ஆணையாளர்,
   தூத்துக்குடி மாநகராட்சி,
   தூத்துக்குடி.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
4. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.